பா.ம.க.வின் முக்கியத் தளபதிகள் சிலர் கட்சிக்குள் தங்களுக்கென ஒரு படையைத் திரட்டி வருகின்றனர். இதனால் அக்கட்சியின் நிறுவன தலைவர் ராமதாஸ் படு அப்செட்டில் இருப்பதுடன் “நான் கஷ்டப்பட்டு வளர்த்த கட்சியை என் காலத்திலேயே அழித்து விடுவார்கள் போலிருக்கிறதே” என்ற ரீதியில் தனக்கு வேண்டப்பட்டவர்களிடம் வருத்தப்பட்டுப் பேசியதாகத் தகவல்.

இதுபற்றி பா.ம.க.வினரிடமே நமது விசாரணையைத் துவங்கினோம்.

“கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னையில் நடந்த மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய



# ‘ஐயாவை’ அச்சுறுத்தும் ஐவர் குழு!

பி.ஆர்.ஆனந்த்

எங்கள் ஐயா, ‘கட்சித் தேர்தலை நடத்தச் சொல்லி 1 வருடமாகிறது. அதை இன்னமும் முடிக்கவில்லை. வரும் 30ஆம் தேதி செயற்குழு, பொதுக்குழு கூடுகிறது. அதற்குள் முடியுங்கள்’ என்று கூறியிருந்தார். அதை இறுதி செய்யும்பொறுப்பைசின்னய்யாவிடம் (டாக்டர் அன்புமணி ராமதாஸ்) ஒப்படைத்தார் ஐயா. இதில்தான் பெரும் குழப்பம் ஏற்பட்டு இப்போது பா.ம.க. நிறுவனரே அப்செட் ஆகும் விதத்தில் கட்சி நிலைமை இருக்கிறது” என்று குண்டைத் தூக்கிப் போட்டார் ஒரு நிர்வாகி.



இதைத் தொடர்ந்து நம்மிடம் பேசிய பா.ம.க. மாவட்டப் பிரமுகர் ஒருவர், “ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஐவர் குழுஒன்றைநியமித்துஅவர்கள்மூலமே மாவட்ட நிர்வாகிகளைத் தேர்வு செய்து அந்தப் பட்டியலை வாங்கி வைத்துக் கொண்டார் சின்னய்யா! கட்சியினரிடம்,‘நிர்வாகிகளைக்கலந்து பேசி நியமிக்கலாம் சென்னைக்கு வாங்க’ என்று முதலில் சொன்னாங்க. அதன்படி அங்கே போனால் தயாராக வைத்திருந்த லிஸ்ட்டைக் காட்டிய சின்னய்யா, ‘இனி இவங்கதான் புதிய நிர்வாகிகள். போய் கட்சியை வளர்க்க வேலை செய்யுங்க’ன்னு துரத்திவிட்டார். கஷ்டப்பட்டு உறுப்பினர்களை சேர்த்து இவ்வளவு நாள் கட்சி வேலை செய்த நல்ல நிர்வாகிகளை இப்படி ஒரே வார்த்தையில் வீட்டுக்கு அனுப்பிவிட்டார் சின்னய்யா! இதன் பின்னணி என்னவென்றால், எங்கள் ஐயா 50 தொகுதிகளைத் தேர்வு செய்து ‘இவை நமக்கான தொகுதிகள். கூட்டணி எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போதிலிருந்தே தேர்தல் வேலையை செய்யுங்கள்’ என்று கூறினார். அதற்கான வரைவுத் திட்டம் ஒன்று தற்போது நடைமுறையில் உள்ளது. இதில் தமக்குப் போட்டியாக யாரும் சீட் கேட்டு வந்துவிடக் கூடாது என்பதற்காக ஐவர் குழு